**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.84 & 85 /2024 - PW-7**

| | |
|---|---|
| Name | திரு. கோகுல் |
| Husband/Father Name | காளிதாஸ் |
| Village /Area | பள்ளூர் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
| Age | 23 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 07.08.2025.

**(எதிரிகள் ஆஜர் ).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். எங்கள் ஊரில் கௌதம் என்ற நபரை கொலை செய்திருப்பதாக நான் தெரிந்துகொண்டேன் இந்த சம்பவத்தின் போது நான் ஊரில் இல்லை. அந்த சமயத்தில் சாட்சி டில்லிபாபு என்னுடன் பணிபுரிந்து வந்ததால் காவல் துறையினர் விசாரணைக்காக என்னை அழைத்ததாக தெரிவித்தனர். நான் காவல் துறையில் ஆஜர் ஆனேன். போலீசார் இப்படி தான் சொல்ல வேண்டும் என்று சொன்னதன் பேரில் நான் வாலாஜா நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் நீதிமன்ற சாட்சியத்தல் உள்ள சாட்சியம் என்னுடையது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அது அதசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

கௌதம் இறந்த தினத்தன்று நான் அவரை பாரக்கவும் இல்லை, நான் அவருடனும் இல்லை. போலீசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கவில்லை. நான் ஊருக்கு வந்த பிறகு காவல் ஆய்வாளர் என்னையும் ஜெயுக்கொடியையும், டில்லிபாபுவையும், குமாரையும் காவல் நிலையத்திற்கு வர சொன்னார் என்று சொன்னால் சரிதான். ஆய்வாளர் தான் என்னை நீதிபதியிடம் எவ்வாறு சாட்சியம் அளிக்கவேண்டும் என்று அழைத்து சென்றார் என்றால் சரிதான். ஆய்வாளர் கூறியதன் அடிப்படையில் நான் நீதிபதியிடம் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். நான் அந்த சாட்சியத்தை சுயவிருப்பத்தின் பேரில் தரவில்லை என்று சொன்னால் சரிதான். ஒரு ஒரு நாள் மட்டும் தான் நான் வாலாஜா நீதிமன்றத்திற்கு சென்று நீதிபதியை பார்த்துவிட்டு வந்தேன். அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகள் யாரையும் எனக்கு தெரியாது.

**(ஒம்./–) திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**